DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
CC-74/2019
Prosecution witness – PW.2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கண்ணதாசன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

( Accused present)
07.02.2024 – 03.10 PM
<u>முதல் விசாரணை</u>:-

1. நான் தற்போது தமிழ்நாடு அரசு வருவாய் துறையில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று மானாமதுரையில் வசித்து வருகிறேன்.

2. நான் வழக்கு சம்பவ சமயத்தில் கமுதி வட்டாட்சியர் அலுவலகத்தில் அபிராமம் உள்வட்ட வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன்.

3. கடந்த 30.06.2012 ம் தேதியன்று நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கமுதி வட்டாட்சியர் மூலம் சம்பவம் குறித்து தகவல் தெரிந்தது. வட்டாட்சியருக்கு பரமக்குடி கோட்டாட்சியர் அவர்களிடமிருந்து தொலைபேசி தகவல் வந்ததாக என்னிடம் தெரிவித்தார்.

4. அதன் பேரில் நானும், வட்டாட்சியரும், மண்டலத் துணை வட்டாட்சியர் திரு.சுரேஷ், அச்சங்குளம் விஏஓ திரு.போஸ் ஆகியோர் மேற்படி சுகன்யா சேம்பருக்கு சென்று விசாரணை நடத்தினோம்.

5. வட்டாட்சியரின் விசாரணையில் அபிராமம் பகுதியில் உள்ள அச்சங்குளம் கிராமப் பகுதியில் அமைந்துள்ள சுகன்யா சேம்பரில் விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், சாலை மறைக்குளம் கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த சுமார் 13 குடும்பத்தினர் கொத்தடிமைகளாக வேலைப் பார்த்துக் கொண்டிருப்பதாக தகவல் தெரிந்தது.

6. விசாரணையில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சேம்பரின் உரிமையாளர் திரு. மூர்த்தி என்பவர் தலா ரூ.50,000/–கொடுத்து பணியில்

அமர்த்தியிருந்தார். தினந்தோறும் ஆயிரம் செங்கல் அறுத்தால் ரூ.500/– யை கூலியாக வழங்கி அதில் ரூ.150/–யை கொடுத்துவிட்டு மீதம் ரூ.350/–யை முன்பணமாக பெற்ற ரூ.50,000/–க்கு கழித்துவிடுவார்.

7. இந்த விபரம் அங்கு வேலை பார்த்துக்கொண்டிருந்த நபர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டோம். மேலும் குடும்பத்தில் நல்லது கெட்டது போன்ற விசேஷங்களுக்கு குடும்பத்தில் ஒருவரை மட்டும் செல்ல அனுமதிப்பார்கள் என்றும் என்னிடம் தெரிவித்தார்கள்.

8. அவர்களில் கார்த்திக் என்பவரை கொடுமைப்படுத்தியதாக என்னிடம் தெரிவித்தார். அதன் பேரில் கோட்டாட்சியரிடம் சம்பவம் குறித்து தகவல் தெரிவித்துவிட்டு அபிராமம் காவல் நிலையத்தில் சுகன்யா செங்கல் சேம்பர் உரிமையாளர் திரு. மூர்த்தி என்பவர் மீது வட்டாட்சியர் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.1 சம்பவ இடத்திலிருந்து புகார் அளிக்க நேரடியாக காவல் நிலையம் சென்ற போது நான் உடனிருந்தேன். நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். ஆனால் காவல் நிலையத்திற்குள் செல்லவில்லை.

2. சம்பவ இடத்திற்கு நாங்கள் எத்தனை மணிக்கு சென்றோம், எவ்வளவு நேரம் இருந்தோம் என்று எனக்கு ஞாபகமில்லை.

3. அ.சா.1 அளித்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.